தேதி.23.06.2025

**சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம்**

**O.S.No**. 247/2019 - **திரு.நாகராஜ், த/பெ.சின்னமாரநாயக்கர்** **வா.சா.1**

**வா.சா.1: சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் இவ்வழக்கில் 3ம் வாதி ஆவேன். என் தரப்பில் சாட்சியமாக விசாரணை செய்ய பிரமாணவாக்குமூல பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி பிரமாணப்பத்திரிக்கையில் கண்டுள்ள சங்கதிகளை அறிவேன். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்ககோருகிறேன். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான்.

**ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.**

25.01.1971ம் தேதி வாதிகளின் தந்தை ரங்கநாயக்கர் பெயரிலுள்ள கிரைய ஆவணத்தின் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.1** ஆகவும், ரங்கநாயக்கர் பெயரிலுள்ள அடங்கல்கள் (எண்ணிக்கை - 5) அசல் **வா.சா.ஆ.2** ஆகவும், 08.02.2019ம் தேதியிட்ட வாதிகளின்பெயர்கள் கொண்ட பட்டா கணினி நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 11.06.2019ம் தேதியிட்ட அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் **வா.சா.ஆ.4** ஆகவும் ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி ஆவணங்களின் பரிசீலனையில் தாவாப்படி பரிகாரம் வழங்க கோருகிறேன்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.23.06.2025

**பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் என்னால் அழைக்கப்பட்டு சாட்சியிடம் படித்து விளக்கமளித்து, அவர் சரியானவை என்று ஒப்புக் கொண்டு என் முன்பாக கையொப்பம் செய்தார்.

சார்பு நீதிபதி,
சத்தியமங்கலம்.

சார்பு நீதிமன்றம், சத்தியமங்கலம், நாள்.23.06.2025